**Avinashilingam Institute for Home Science and Higher Education for Women**
**Coimbatore – 641 043**

**Master's Degree Examination – November 2018**
**II Semester**

**Class: I PG** | **Time : 3Hrs**
**Major: Tamil** | **Max. Marks: 60**

**12MTMC04 பண்டைய இலக்கியம்**

**பகுதி-அ** 10×½= 5

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து வட்டமிடுக**

1. "எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
   சிறுவன் மள்ளரும் உளரே" யார் கூற்று
   அ. அதியமான் ஆ. ஔவை இ. போர் வீரர் ஈ. முதுமக்கள்

2. சிறப்புடை யாளன் மாண்புகண்டு அருளி
   வாடுமுலை ஊறிச் சுரந்தன்" இதில் அமைந்துள்ள துறை
   அ. ஏறாண்முல்லை ஆ. உண்டாட்டுத் துறை
   இ. ஊவகைக் கலுழுசித்துறை ஈ. தானை மறத்துறை

3. பெருங்கோப்பெண்டு பாடிய பாடலின் துறை
   அ. கையறுநிலை ஆ. ஆனந்தப்பையுள் இ. தாபதநிலை ஈ. முதுபாலை

4. கருவூர் கோட்டையை அழித்த மன்னன்
   அ. கிள்ளிவளவன் ஆ. பூதப்பாண்டியன் இ. அதியமான் ஈ. நெடுஞ்செழியன்

5. "பிரிதல் ஆடவர்க்கு இயல்பெனின்
   அரிது மன்றம்ம அறத்தினும் பொருளே" யார் கூற்று?
   அ. தோழி ஆ. தலைவன் இ. தலைவி ஈ. ஊர்மக்கள்

6. எத்திணையில் 6,16,26,36 என்னும் எண் வரிசையில் அகநானூற்றுப் பாடல்கள் வரும்
   அ. குறிஞ்சி ஆ. முல்லை இ. பாலை ஈ. மருதம்

7. "யானும் ஓர் ஆடுகள மகளே" என்று பாடிய பாடலின் ஆசிரியர் யார்?
   அ. நன்முல்லையார் ஆ. மாசாத்தியார் இ. வெள்ளிவீதியார் ஈ. ஆதிமந்தியார்

8. கருங்கால் வெண்குருகு மேயும்
   பெருங்குளம் ஆயிற்று என் இடைமுலை நிறைந்தே" என்ற கூற்றின் ஆசிரியர் யார்?
   அ. வெள்ளிவீதியார் ஆ. ஔவையார்
   இ. நன்னாகையார் ஈ. வெண்மாலை ஆதியார்

9. நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர்வரை கரிகாலன் நடந்து சென்ற தூரம்
   அ. நான்கு ஆ. ஆறு இ. ஏழு ஈ. ஒன்பது

10. "கொல்லை எழுகொழு ஏய்ப்ப வல்லே
    எல்லையும் இரவும் ஊன்நின்று மழுங்கி" என்ற வரி இடம் பெற்ற நூல்
    அ. அகநானூறு ஆ. நற்றிணை இ. பொருநராற்றுப்படை ஈ. புறநானூறு

**பகுதி – ஆ 5×4=20**

**கீழ்வரும் வினாக்களுக்கு 200 சொற்களில் விடை தருக.**

11. அ. அதியமானைப் பற்றி ஔவை பாடிய கையறுநிலைப் பாடல்களின் கருத்தினை எழுதுக.

(அல்லது)

ஆ. வாழ்வின் இலக்கணமாக ஔவை கூறிய கருத்துகளைச் சுட்டுக.

12. அ. மாறபித்தியாரின் உள்ளக்கருத்துகளை விளக்கி வரைக.

(அல்லது)

ஆ. பொன்முடியார் பாடல் கருத்தின் நுட்பத்தினை விவரி.

13. அ. பிரிவு வலித்த தலைமகன் தன்நெஞ்சுக்குக் கூறிய செய்திகளை கீரன் எயிற்றியார் பாடல் வழி எழுதுக.

(அல்லது)

ஆ. தலைவியின் கூற்றாக காமக்கண்ணியார் பாடிய அகநானூற்றுப் பாடலின் கருத்துகளை விளக்குக.

14. அ. குறுந்தொகைப் பாடல்களில் ஔவையாரின் உள்ளக் கருத்தினைப் புலப்படுத்துக.

(அல்லது)

ஆ. கழார்க்கீரன் எயிற்றின் புலமைத்திறனை விளக்கி வரைக.

15. அ. யாழின் அமைப்பினை விளக்கி வரைக.

(அல்லது)

ஆ. பாடினியின் வருணனையைப் பொருநராற்றுப்படை வழி விவரி.

**பகுதி - இ 5×7=35**

**கீழ்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடை தருக.**

16. அ. அதியமானின் வீரத்தினையும், ஈகைக்குணத்தினையும் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ. போர் வீரர்களின் வீரத்தை ஔவை பாடல் வழி ஆய்வு செய்க.

17. அ. கைக்கிளைப் பாடல் வழி நக்கண்ணையாரின் மனநிலையைத் திறனாய்வு செய்க.

(அல்லது)

ஆ. நப்பசலையாரின் கவிப்புலமையை அவர்பாடல் வழி ஆராய்க.

18. அ. வரைவு தோன்ற கூறப்பட்ட நற்றிணைப் பாடல்களைத் தொகுத்துக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ. தோழியின் பங்களிப்பினை அகநானூற்றுப் பாடல் வழி எடுத்தியம்புக.

19. அ. வெள்ளிவீயாரின் கவித்திறத்தினைக் குறுந்தொகைப் பாடல்வழி கட்டுரைக்க.

(அல்லது)

ஆ. மாசாத்தியார் பாடல்களின் கருத்துப் புலமையைப் விளக்குக.

20. அ. கரிவால்வளவனின் வீரம், கொடை, விருந்தோம்பலின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

ஆ. சோழநாட்டின் நீர் வளம், நிலவளச் செழிப்பினைத் தொகுத்து எழுதுக.

***********